**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-06032022-4699

Volume: 6

Issue: 3

Month: January

Year: 2022

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 05.11.2021

Accepted: 20.12.2021

Published: 01.01.2022

Citation:
Shyamala, M. "Weaving Millet in the Great Myth Theme." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 3, 2022, pp. 229–34.

DOI:
https://doi.org/10.34293/tamil.v6i3.

*Corresponding Author:
manidrshyamala@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Weaving Millet in the Great Myth Theme

**Dr. M. Shyamala**
*Assistant Professor*
*Department of Tamil (Shift - II)*
*Gurunanak College,Chennai, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0002-8616-4246

**Abstract** - Ancient literature of tamil, unique literature. The department has a great place in the literary tradition of the department which is famous for its literature that speaks of the pride of tamil. This mythical literary tradition has also had a great influence on later literary development.

It can be seen that this influence has been created in the great myth as well. The first thing that is spoken of in the intrinsic tradition is the primordial, thematic, the adjective. First, the nucleus, the adjective archetype, and the adjective are created to suit grammatical development. Sixty-three nayans cover all races and lands. The first embryo of the five lands, the first of kurinji to paalai, is preserved in this book by sheikh peruman.

**Keywords:** Ancient Literature, Tamil Puranam, Periyapuranam, Mythical Literary, Great Myth, Sixty-three Nayans, Five Lands, Kurinji, Paalai.

## References

1. Ilampuranar. 2004. *Tholkappiyam, Porulathikaram.* Chennai, (Agathinaiyiyal, Purathinaiyiyal), Saivasithantha Nootpathippu Kazhagam.
2. Nadarasan. 2007. *Thiruththondar Puranam Ennum Periyapuranam (1-7 Parts).* Chennai, Uma Pathippagam.
3. Manomani Sanmugadas. 2000. *Kurunthogai Oru Nunnaivu*. Chennai, International Institute of Tamil Studies.
4. Subburediyar. 1981. *Agathinai Kolgaikal.* Chennai, Parry Nilayam.
5. Natkavirasar Nimbi. 1997. *Nambigapporul*. Saivasithantha Nootpathippu Kazhagam, Chennai, 1997.

# பெரியபுராணத்தில் நெய்தல் திணைக் கருப்பொருட்கள்

***முனைவர். ம. சியாமளா***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, (சுழற்சி - II)
குருநானக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழின் தொன்மை வாய்ந்த இலக்கியம், தனிச்சிறந்த இலக்கியம். தமிழின் பெருமையைப் பறை சாற்றும் இலக்கியம் என்றெல்லாம் புகழப்படும் திணை இலக்கிய மரபில் அகப்பொருள் பெரும் இடத்தினைப் பெற்றுள்ளது. இத்தொன்மை இலக்கிய மரபு பிற்கால இலக்கிய வளர்ச்சியிலும் பெரும் செல்வாக்கை ஏற்படுத்தியுள்ளது. இச்செல்வாக்கைப் பெரியபுராணத்திலும் ஏற்படுத்தியுள்ளமை அறியலாம். அகப்பொருள் மரபில் முதலாவதாகப் பேசப்படுவன முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்பனவாகும். முதல், கரு, உரிப்பொருள் தொல்காப்பியம் மற்றும் நம்பியகப்பொருள் இலக்கண வளர்ச்சிக்கு ஏற்றவாறு படைக்கப்பட்டுள்ளது. அறுபத்துமூன்று நாயன்மார்களில் எல்லா இனத்தவர்களும், நிலத்தவர்களும் இடம்பெறுவதால் குறிஞ்சி முதல் பாலை ஈறாகவுள்ள ஐந்து நிலத்திற்கும் உரிய முதல் கரு உரிப்பொருள் இந்நூலில் சேக்கிழார் பெருமானால் மிகவும் சிறப்பான தன்மையில் பேணப்பட்டுள்ளது.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ்ப்புராணம், பெரியபுராணம், திணை இலக்கியம், அகப்பொருள், குறிஞ்சி முதல் பாலை, சேக்கிழார்*

***முன்னுரை***

திணை இலக்கியம் ஒவ்வொன்றும் தனியுலகம் என்பதனை வ.சுப. மாணிக்கனார், தமிழர் வகுத்த குறிஞ்சி முதலாம் ஒவ்வொரு திணையும் தன்னிறைவுடையது. தன்னகத்து வாழும் மக்கட்கு வேண்டும் உணவு முதலான நுகர்ச்சிகளையும், யாழிசை முதலான கலைகளையும், தெய்வம் முதலான நெறியுணர்வையும், தொழில் முதலான வினை வாய்ப்புகளையும் வழங்கவல்ல பெற்றியது. வாழ்க்கைக்கு வேண்டும் கூறுகளெல்லாம் கொண்டிருத்தலின், திணை ஒவ்வொன்றும் தனியுலகம் என்று சொல்லத் தக்க அமைவுடையது என்று குறிப்பிடுகின்றார். எனவே திணை இலக்கியம் மனித வாழ்விற்கு உகந்த நில இயல்பு என்பதனை உணர முடிகின்றது.

**கருப்பொருள்**

அகப்பாடல்களை உயிரோவியமாகச் செயல்பட வைப்பன கருப்பொருள்களாகும். கவிஞனின் கற்பனைக்கு எட்டிய செய்தியோடு மறைபொருளை வைத்துப் படிப்போரை உய்த்துணர வைக்கும் உள்ளுறை உவமம், இறைச்சி முதலானவையை உருவாக்கக் கவிஞனுக்குக் கைகொடுத்து நிற்கும் களமும் இதுவாகும். அதுபோல் உரிப்பொருளாகிய ஒழுக்கம் நிகழ உதவுவதும் இதுவேயாகும். மனோன் மணி சண்முகதாஸ் கருப்பொருள் பற்றிக் குறிக்கையில்,

> **அகத்திணை பற்றிக் கூறும் அகப்பாடலுக்குக் கருப்பொருள் முழுநிலையில் தொடர்பு பட்டு நிற்பதுடன் நன்கு பயன்படுத்தப்படும் அம்சமாகவும் உள்ளது. முதல், கரு, உரி என்று பாடலிலே சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கும் பண்புகளில் கருப்பொருள் நடுவிலே கூறப்பட்டிருப்பதும் அதன் சிறப்பியல்பு நோக்கியே என்று கூற இடமுண்டு.**
>
> ***(மனோண்மணி சண்முகதாஸ். குறுந்தொகை ஒரு நுண்ணாய்வு, ப.51)***

என்கிறார். அகத்திணையில் அமையும்

கருப்பொருட்களைத் தொல்காப்பியர் கீழ்க்காணும் வகையில் விளக்குகிறார்.

**தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப**
**(தொல்.பொருள்.20)**

தொல்காப்பியனார் விரித்துரைக்காத கருப்பொருளை உரையாசிரியர் நச்சினார்க்கினியர் ஐந்து திணைக்கும் விரித்துரைக்கின்றார்.

**நெய்தல் கருப்பொருட்கள்**

நெய்தல் நிலக் கருப்பொருட்களை நச்சினார்க்கினியர்,

**நெய்தற்கு உணா மீன் விலையும், உப்பு விலையும், மா உமண்பகடு போல்வன முதலையும், சுறாவும் மாவென்றால் மரமன்று (இஃது இறையனார் களவியலுரையையும் இளம்பூரணர் உரையையும் மறுப்பதாகும்). மரம் புன்னையும் ஞாழலும் கண்டலும் புள் அன்னமும் அன்றிலும் முதலியன பறை மீன் கோட்பறை, செய்தி மீன் படுத்தலும் உப்பு விளைத்தலும், அவை விற்றலும், யாழ் நெய்தல் யாழ், பிறவுமென்றதால் பூ கைதையும் நெய்தலும், நீர் மணற் கிணறும், உவர்க்குழியும், ஊர் பட்டினமும் பாக்கமும்**
**(தொல்.பொருள்.அகத்திணையியல், நச்சினார்க்கினியர் உரை)**

என உணர்த்தியுள்ளார்.

நெய்தல் நிலக் கருப்பொருளின் வளர்ச்சி நிலையாக,

**“வருணன்சேர்ப்பன்வரிதிரைப்புலம்பன் பருமஅல்குற்**
**பரத்தி நுளைச்சிநுளையர் நுளைச்சியர் பரதர்பரத்தியர்**
**அளவர்அளத்தியர் அலைகடற்காக்கை சுறவம்பாக்கம் பெறலரும்**
**பட்டினம் உவர்நீர்க்கேணி கவர்நீர்**
**நெய்தல் கண்டகக்கைதை**
**முண்டகம்அடம்பு கண்டல்புன்னை வண்டிமிர் ஞாழல்**
**புலவமீனுப்பு விலைகளிற் பெற்றன நளிமீன்கோட்பறை**
**நாவாய்ப்பம்பை விளரியாழ் செவ்வரி மீனுப்புப்படுத்தல்**
**உணங்கலை விற்றின் மீன்உணக்கல் புள்யோப்பல்**
**நெடுங்கட லாடல் நெய்தற் கருப்பொருளே”**
**(நம்பி. 24)**

என நம்பியகப்பொருள் கூறுகிறது.

**தெய்வம்**

நெய்தல் நிலத்திற்குரிய கடவுள் வருணன்.

**“சுறவமுள் மருப்புஅணங்கு அயர்வன கழிச்சூழல்” (பெரிய. 1: 4: 5: 7)**

என்ற பாடலடிகளால் சுறாமீன்களின் முட்டைகளை உடைய கொம்புகளைத் தெய்வப் படிவமாக வைத்து விழாக் கொண்டாடுதற்கு இடமான நெய்தல்நிலக் கழியிடங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்திர தெய்வத்தைச் சுறவு நட்டு வழிபடும் நெய்தல்நில வழக்காறு கூறப்படுவதைக் காணலாம். நச்சினார்க்கினியர்,

**நெய்தனிலத்தில் நுளையர்க்கு வலை வளந்தப்பின் அம்மகளிர் கிளையுடன் குழீஇச் சுறவுக் கோடு நட்டுப் பரவுக்கடன் கொடுத்தலின் ஆண்டு வருணன் வெளிப்படும்**
**(ந. சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள், ப.12)**

என்றார்.

**உணவு**

மீன் மற்றும் உப்பு விற்றலால் வரும் பொருள் நெய்தல் நிலத்து மக்களின் உணவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**“மன்னுதொன்மையின் விலைவளத்து உணவினில் மலிந்த**
**தன்மை வாழ்குடி மிடைந்தது தடநுளைப்பாடி” (பெரிய. 2: 3: 4: 5)**

என்பது இது குறித்த பாடலடிகள். நிலைபெற்ற பழமையால் வலைவீசி மீன் பிடிக்கும் தொழிலால் வளம்பெறும் மீன் உணவினில் பெருகிய தன்மையால் வாழ்வு கொண்ட பரதவர் குடிமக்களைக் கொண்டது அந்த நுளைப்பாடி. மீன் பிடிப்போர் வாழுமிடம் என்பது பாடலடிகளில் குறித்த செய்தியாகும்.

**"கவரும் மீன்குவை கழியவர் கானவர்க்கு அளித்துச்**
**சிவலும் சேவலும் மாறியும் சிறுகழிச்சியர்கள்**
**அவரை ஏனலுக்கு எயிற்றியர் பவளம்முத்து**
**உவர்நெய்தலும் கானமும் கலந்துள ஒழுக்கம்" (பெரிய. 1: 4: 5: 44)**

என்பதனால் மீனவர்கள் தாங்கள் கொண்டு வந்த மீன் குவியல்களை இடையர்களுக்குக் கொடுத்துப் பண்டம் மாற்றிடும் முறையில் அவர்களிடமிருந்து கவுதாரியையும் சேவலையும் கொள்ள, நெய்தல் நிலச்சிறுமியர்கள் தாம் இடைச்சியர்பால் பெறும் அவரைக்கும், தினைக்கும் ஈடாகப் பவளத்தையும் முத்துக்களையும் அளந்து கொடுப்பர். இதன் மூலம் பண்டம் மாற்றிப் பெறும் உணவு கூறப்பட்டுள்ளமை அறியலாம்.

**விலங்கு**

கடல் சூழ்ந்த நெய்தல் நிலத்தில் சுறா முதலான விலங்குகள் குறிக்கப்பட்டுள்ளன.

**சுறவமுள் மருப்பு அயா;வன கழிச்சூழல்**
**(பெரிய. 1: 4: 5: 7)**

**மரம்**

கடற்கரைச் சோலைகளில் ஓதிமம், புன்னை முதலான மரங்கள் இருந்தமை குறிக்கப்பட்டுள்ளது.

**கணம்கொள் ஓதிமம் கருஞ்சினைப் புன்னையங் கானல் (பெரிய. 2: 3: 4: 7)**

**பறவை**

கடல் சூழ்ந்த நெய்தல் நிலத்தில் பெரும்பாலும் மீன் கவர்தல் பொருட்டு வரும் பறவைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**"உணங்கல் மீன்கவர் உறுநசைக் குருகுடன் அணைந்த"**
**(பொணீய. 2: 3: 4: 7)**

உலரும் மீன்களைக் கவர்வதற்காக வரும் ஆசை கொண்ட பறவைகளுடன் அன்னங்கள் கூடவரும் எனக் குறிக்கப்பட்டுள்ளது. மேலும், நீர்க் காக்கைகள் நிரம்பிய பெரிய பொய்கைகளை உடைய சீர்காழிப் பதி குறிக்கப்பட்டுள்ளது.

**"கரண்டம்மலி தடம் பொய்கை"**
**(பெரிய. 1: 5: 1: 233)**

**யாழ்**

நெய்தலுக்குரிய யாழ் பற்றிய செய்தி பெரியபுராணத்தில் இடம்பெற்றுள்ளது. குதித்து மேற்கிளம்பும் பெரிய அலைகள் சூழப்பெற்ற வளாகத்தின் முன்னே குடியமர்ந்த இடங்களில் மூங்கில் போன்ற தோள்கள் கொண்ட மீனவப் பெண்கள் தாம் பரப்பிய கயல் மீன்களுள், கண்களான கயல் மீன் நீங்கலாக அக்கழியிலுள்ள கயல் மீன்களை விலை பேசுகின்ற இனிமை கொண்ட சிறிய மழலையாகிய மென்மொழிகளின் இனிய தன்மையை அந்நிலத்திற்குரிய செவ்வழியாழ் பெற்றுள்ளது என்று கூறுவதால் நெய்தல் நிலயாழ் கூறப்பட்டுள்ளது.

**"வாம் பெருந்திரை வளாகமுன் குடிபயில் வரைப்பில்**
**தாம் பரப்பிய கயல்களின் விழிக்கயல் தவிரக்**
**காம்பின் நோ;வரும் தோளியா; விழிக்கயல் விலைசெய்**
**தேம் பொதிந்த சின்மழலை மென்மொழிய செவ்வழியாழ்"**
**(பெரிய. 1: 4: 5: 38)**

**பூ**

நெய்தல் நிலப் பூக்களான நெய்தல், கைதை முதலானவை பெரியபராணத்தில் இடம்பெற்றுள்ளன.

**நிழல்செய் கைதைசூழ் நெய்தல்அம் கழியன நெய்தல் (பெரிய. 1: 4: 5: 10)**

நெய்தல் நிலத்துத் தாழைகள் நெய்தல் மரங்களில் மலர்ந்திருக்கும் கழிகளை உடையன. மேலும்,

**"சேயநீள் விழிப் பரத்தியா; தொடுப்பன செருந்தி" (பெரிய. 1: 4: 5: 34)**

சிவந்த நீண்ட கண்களை உடைய பரத்திய பெண்கள் செருந்தி மலர்களைத் தொடுக்கின்றனர் என்பதும் கூறப்படுகிறது.

**தொழில்**

நெய்தல் நிலத்தில் வாழும் மக்களின் நிலச் சூழலுக்கேற்ற முறையில் தொழில் கூறப்பட்டுள்ளது. பெரிய உப்பு விளையும் அளங்களில் அவர்களால் உப்பு அளக்கப்படுகின்றன என்பதில் தொழில் கூறப்படுகின்றது.

**"ஆயபர் அளத்து அளவர்கள் அளப்பன உப்பு" (பெரிய. 1: 4: 5: 34)**

மேலும், அதிபத்த நாயனார் புராணத்தில் வரும்,

**"முட்டுஇல் மீன்கொலைத் தொழில் வளர்த்தவர் வலைமுகந்து**
**பட்ட மீன்களில் ஒருதலை மீன்படு தோறும்**
**நட்டம் ஆடிய நம்பருக்கு என நளிர்முந்நீர்**
**விட்டு வந்தனர் விடாதஅன்புடன் என்றும் விருப்பால்" (பெரிய. 2: 3: 4: 11)**

என்ற பாடல் காட்டத்தக்கது. குறைவற்ற மீன்களைப் பிடித்து வளத்தைக் கொண்ட மீனவர் வலைகளால் வார் எடுப்பதினால் வரும் மீன்களில் ஒரு தலைமை பெற்ற மீனினை எடுத்து நட்டம் நாடும் நம்பருக்காகத் தாம் கொண்ட பேரன்பினால் குளிர்ந்த கடலிலேயே நித்தமும் விடுத்து வந்தனர் என்பதில் மீனவர்களின் தொழில் குறிப்பிடப்படுகிறது. மேற்கூறிய பாடலில் உப்பு விற்றல், மீன் பிடித்தல் முதலான தொழில்கள் கூறப்பட்டுள்ளன.

**ஊர்**

நெய்தல் நில மக்கள் வசிக்கும் இடம் பட்டினம், பாக்கம் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டன.

**"பொன்னி நாடுஎனும் கற்பகப் பூங்கொடி மலர் போல்**
**நன்மை சான்றது நாகப்பட்டினத் திரு நகரம்" (பெரிய. 2: 3: 4: 1)**

என்பதனால் காவிரி நாடு எனும் கற்பகப் பூங்கொடியிற் மலர்ந்த மலரனைய நாகப்பட்டினம் என்கின்ற திருநகரமானது நன்மையினில் மேம்பட்டது என்று கூறப்பட்டுள்ளது.

நிலைபெற்ற தொன்மையின் மீன் பிடிக்கும் தொழிலால் வளம்பெறும் மீன் உணவினில் பெருகிய தன்மையால் வாழ்வு கொண்ட பரதவக் குடிமக்களைக் கொண்டது நுளைப்பாடி என்பது எனக்கூறும் பின்வரும் பாடலடிகளில் வாழுமிடம் என்று கூறப்பட்டுள்ளது.

**"மன்னு தொன்மையின் விலைவளத்து உணவினில் மலிந்த**
**தன்மை வாழ்குடி மிடைந்தது தடநுளைப் பாடி" (பெரிய. 2: 3: 4: 5)**

**நீர்**

நெய்தல் நில மக்களுக்கு மணல் கிணறு நீர் ஆதாரமாக விளங்குகிறது.

**"தொடுகடல் சங்கு துறையவர் குளிப்பன அவர்தம்**
**வடுவகிர்க் கண் மங்கையர் குளிப்பன மணற்கேணி" (பெரிய. 1:4: 5: 35)**

கடற்துறையோர் சங்கு குளிக்கின்றனர் அவர்களின் மாவடுவின் பிளப்பினைப் போல வடிவு கொண்ட கண்களை உடைய மகளிரால் மணற்கேணி குளிக்கப்படுகின்றன என்ற செய்தியில் மணற்கேணி கூறப்படுகிறது.

**மக்கள்**

நெய்தல் நில மக்களாகக் கருதப்படுபவர்கள் பரதவர், பரத்தியர், நுளையர், நுளைச்சியர்; ஆவர். நுளைச்சியர்களால் மணற் கரையில் படும் பவளங்கள் விற்கப்படுகின்றன.

> **"படுமணல் கரை நுளைச்சியர் கொடுப்பன பவளம்"**
>
> *(பெரிய 1: 4: 5: 35)*

அதிபத்தர்என்னும்அன்பர்பரதவர்களின் தலைவரானமை குறிப்பிடப்பட்டுள்ளது.

> **"ஆங்கு அவ்வன்பர்தாம் நுளையர்தம் தலைவராய் அவர்கள்"**
>
> *(பெரிய 2: 3: 4: 10)*

மேலும் விரிந்த கடலில் செலுத்தும் மீன் படகின் தொழிலினால் வாழும் பரதவர்கள் கொணர்ந்த கயல் மீன்களை அவர்களிடம் பெறும் பரத்தியரின் கரிய நீண்ட கண்களின் அளவு விலை இத்துணை என்பதனை அளவிட முடியாதாம் எனக் கூறுமிடத்தில் நெய்தல் நில மக்களான பரதவர், பரத்தியர் கூறப்படுகின்றனர்.

> **வியல் அளக்கரில் விடும் திமில் வாழ்நர்கள் கொணர்ந்த**
> **கயல் அளப்பன பரத்தியர் கருநெடுங்கண்கள்**
>
> *(பெரிய. 2: 3: 4: 6)*

மேற்கூறிய நெய்தல் நிலக் கருப்பொருட்களாகப் பெரியபுராணத்தில் இடம்பெறுவனவாகும்.

**முடிவுரை**

அகப்பாடல்களை உயிரோவியமாகச் செயல்பட வைப்பன கருப்பொருள் களாகும். நெய்தல் நிலத்தின் கருப்பொருளாகிய தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, யாழ், பூ, தொழில், ஊர், நீர், மக்கள் எனப்படுபவை பெரியபுராணத்தில் காணப்படுகின்றன என்பதனை இக்கட்டுரையின் வாயிலாக அறியமுடிகிறது.

**துணை நின்ற நூல்கள்**

1. இளம்பூரணர். 2004. *தொல்காப்பியம் பொருளதிகாரம் (அகத்திணையியல், புறத்திணையியல்)*. சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.
2. நடராசன். 2000. *திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணம் (1-7 தொகுதிகள்)*. சென்னை, உமா பதிப்பகம்.
3. மனோண்மணி சுந்தரதாஸ். 2000. *குறுந்தொகை ஒரு நுண்ணாய்வு*. சென்னை, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.
4. சுப்புரெட்டியார். 1981. *அகத்திணைக் கொள்கைகள்*. சென்னை, பாரி நிலையம்.
5. நாற்கவிராசர் நம்பி. 1997. *நம்பியகப்பொருள்*. சென்னை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.